DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.1
SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC.221 / 2016 |
| Depostition of witness for | Prosecution wit. PW. 5 |
| Name | திரு. அயுப்கான் |
| Father Name | அபுல்ஹசன் |
| Village | ஆறாம் பண்ணை |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | 53 |

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர்கள் ஆஜர்))**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the 23-07-2025.(நேரம்: 02.54PM )**

**முதல்விசாரணை**

1. நான் தற்போது ஆறாம்பண்ணையில் குடியிருந்து வருகிறேன்.

2. நான் சொந்தமாக தொழில் செய்து வருகிறேன்.

3. அசா 1ஐ எனக்கு தெரியும்.

4. இவ்வழக்கின் ஆஜர் எதிரியையும் எனக்கு தெரியும்.

5. கடந்த 2016 ஆம் ஆண்டு மாலை 06.00 மணியளவில் ஆறாம் பண்ணையில் உள்ள மீரா மெட்ரிக்குளேசனில் வைத்து அசா 1ஐ இவ்வழக்கின் எதிரி அடித்து விட்டார்.

6. பின்பு காவல் நிலையத்தில் இதுசம்மந்தமாக அசா 1புகார் கொடுத்தார்.
7.போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை (நேரம் 02.58PM)**

1. இந்த சம்பவத்தை பற்றி நேரடியாக எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

2. பல ஆண்டுகளுக்கு முன்பாக நடந்த ஜமாக் தேர்தலில் நானும், அசா 1ம் ஒரு கூட்டணியிலும் எதிரி இன்னொரு கூட்டணியிலும் இருந்து எதிர் எதிராக தேர்தலில் போட்டியிட்டோம் என்றால் சரிதான்.

3. அந்த தேர்தலுக்கு பிறகு எனக்கும், எதிரிக்கும் எவ்வித பேச்சுவார்த்தையும் இல்லை என்றால் சரிதான்.

4.அசா 1 என்னுடைய நெருங்கிய உறவினர் என்றால் சரிதான்.

5.காவல் துறையினர் இந்த சம்பவம் நடந்து எத்தனை நாள் கழித்து வந்து என்னை விசாரித்தார்கள் என்று கேட்டால் 3 நாள் கழித்து விசாரித்தார்கள்.

6.இன்று நீதிமன்றத்திற்கு அசா 1 இப்ராகிம் என்னுடன் வந்துள்ளார் என்றால் சரிதான்.

7.அசா 1 இப்ராகிம் என்னுடைய நெருங்கிய உறவினர் என்பதாலும் ஜமாத் தேர்தலில் போது ஏற்பட்ட விரோததின் காரணமாகவும் அசா 1 ஆதரவாக நான் பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

8. எனக்கும் இந்த சம்பவத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும் நான் சொல்வதுபோல் எந்தவொரு சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

//சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில்சாட்சி சொல்ல, சொல்ல என்னால் தட்டச்சருக்குசொல்லப்பட்டு, அவரால் கனிணியில் பதிவு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு ஒப்புக்கொண்டு கையெழுத்து பெறப்பட்டது.//

(ஒ/ம்)G.ராமசங்கரன்
நீதித்துறை நடுவர் எண்.1(மு.பொ)
ஸ்ரீவைகுண்டம்.

DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.1 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC.221 / 2016 |
| Depostition of witness for | Prosecution wit. PW. 6 |
| Name | திரு. சாகுல் ஹமிது |
| Father Name | காஜா மொகைதீன் |
| Village | ஆறாம் பண்ணை |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | 32 |

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர்கள் ஆஜர்))**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the 23-07-2025.(நேரம்: 03.05PM )**

**முதல்விசாரணை**

1. நான் தற்போது திருப்பூரில் குடியிருந்து வருகிறேன்.

2. நான் சொந்தமாக தொழில் செய்து வருகிறேன்.

3. என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரில் உள்ள சாகுல் ஹமிது என்ற கையெழுத்து என்னுடையது தான்.

4. கடந்த 22.04.2016 ஆம் தேதி மாலை 04.30 முதல் 05.00 மணிக்குள் ஆறாம்பண்ணையில் உள்ள மீரா மெட்ரிகுளேசன் ஸ்கூலுக்கு அருகில் நான்

நின்றுக்கொண்டிருக்கும்போது முரப்பநாடு போலிசார் அங்கு வந்து வரைபடம் வரைந்தார்கள். நான் படித்துப்பார்த்து கையெழுத்து போட்டுக்கொடுத்தேன்.**அந்த பார்வைமகஜர் அசாஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

5.போலிசார் என்னை விசாரித்தார்கள்

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**( 03.08PM)

1. எனக்கு சம்பவம் பற்றி நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

2. பல ஆண்டுகளுக்கு முன்பாக நடந்த ஜமாக் தேர்தலில் நானும், அசா 1 இப்ராகிமும் ஒரு கூட்டணியிலும் எதிரி இன்னொரு கூட்டணியிலும் இருந்து எதிர் எதிராக தேர்தலில் போட்டியிட்டோம் என்றால் சரிதான்.

3.அந்த தேர்தலுக்கு பிறகு எங்களுக்கும், எதிரிக்கும் எவ்வித பேச்சுவார்த்தையும் இல்லை என்றால் சரிதான்.

4. சாட்சி இப்ராகிம் எனக்கு உறவினாரா என்றால் இல்லை.

5.சம்பவம் நடந்து எத்தனை நாள் கழித்து போலிசார் விசாரித்தார்கள் என்று கேட்டால் சம்பவம் நடந்த அன்றும் விசாரித்தார்கள் மறுநாளும் விசாரித்தார்கள்.

6. அசா 1 இப்ராகிம் இன்று என்னுடன் நீதிமன்றத்திற்கு வந்துள்ளார் என்றால் சரிதான்.

7.ஜமாத்தில் நானும், அசா 1ம் ஒரே கூட்டணியாக இருப்பதால் எதிரிக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

8. எனக்கும் , இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும் அசா 1 எனக்கு தெரிந்தவர் என்பதால் அவருக்கு ஆதராவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

//சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில்சாட்சி சொல்ல, சொல்ல என்னால் தட்டச்சருக்குசொல்லப்பட்டு, அவரால் கனிணியில் பதிவு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு ஒப்புக்கொண்டு கையெழுத்து பெறப்பட்டது. //

(ஒ/ம்)G.ராமசங்கரன்
நீதித்துறை நடுவர் எண். 1(மு.பொ)
ஸ்ரீவைகுண்டம்.